1973 டிசம்பர் 1]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : டீசல் எண்ணெய்க்குத் தட்டுப்பாடு இருந்தபோது கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அடையாளக் கார்டு வழங்கினார். தற்போது டீசல் எண்ணெய்க்குத் தட்டுப்பாடும் இல்லை, அடையாளக் கார்டு வழங்கப்படுவதும் இல்லை.

சாண்டிநல்லா கோழிப்பண்ணை

***561 வினா—திரு. கு. அ. பொம்மன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகையில் சாண்டிநல்லா கோழிப்பண்ணையினை விரிவு படுத்தும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : உதகை சாண்டிநல்லா கோழிப் பண்ணையை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் இல்லை. ஏனென்றால் அங்கு கோழிப் பண்ணையே இல்லை. (சிரிப்பு)

தண்டுமேட்டா கிராமத்தில் தெரு விளக்குகள்.

***562 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தாமரைப் பாக்கம் ஊராட்சியில் அடங்கிய தண்டுமேட்டா கிராமத்திற்கு இன்னும் தெரு மின்விளக்குகள் போடப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இவ்வேலை எப்போது நிறைவடையும் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) தண்டு மேட்டா கிராமத்திற்கு இரண்டு குழல் விளக்குகள் (தெரு விளக்கு) போடப்பட்டு 29—8—1973 முதல் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. கா. வேழவேந்தன் : நன்றியைச் சொல்லுகின்ற நேரத்தில், ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ஊராட்சியிலும் எவ்வளவு விளக்குகள் எரிகின்றன, எவ்வளவு எரியவில்லை என்ற